பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண். 14/2024

வா.சா. 1– ராஜாமணி

நாள். 09.09.2025.

வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது அரவக்குறிச்சி தாலுகா, ஆத்தூர் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். என் கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்து அரவக்குறிச்சி தாலுகா, ஆத்தூர் கிராமத்தில் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி கிராமத்தில் உள்ள சொத்தில்தான் நானும், எனது கணவரும் விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள முகவரியில் நான் தற்போது குடியிருக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு கச்சா நாயக்கருக்கும், அவரது சகோதரர் ரங்கசாமி நாயக்கருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் சரிதான். கச்சா நாயக்கரும், அவரது சகோதரர் ரங்கசாமி நாயக்கரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். கச்சா நாயக்கருக்கு எல்லப்ப நாயக்கர் என்ற மகனும், அக்கம்மாள், எல்லம்மாள், அச்சம்மாள் என்ற மகள்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அக்கம்மாள், எல்லம்மாள் உயிருடன் இருக்கிறார்கள் என்றும், அச்சம்மாள் இறந்து விட்டார் என்றால் சரிதான்.

கச்சாநாயக்கரின் வாரிசுகளான அக்கம்மாள், எல்லம்மாள் இறந்து போன அச்சம்மாளின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கில் அக்கம்மாள், எல்லம்மாள், அச்சம்மாளின் வாரிசுகளும் தேவையான தரப்பினர்கள் என்றால் சரிதான். நான் படிக்காததால் என்ககு அதை பற்றி தெரியவில்லை. தாவா வழக்கில் எல்லம்மாள், அச்சம்மாளின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காத தோசத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் என்ககு அது பற்றி தெரியாது. எல்லப்பநாயக்கருக்கு மொத்தம் 4 மக்கள் ஆவார்கள். அதில் மூத்தவர் பாலாமணி, இரண்டாவது நான், மூன்றாவது செல்வமணி, நான்காவது இவ்வழக்கின் பிரதிவாதியான அமராவதி என்றால் சரிதான். தாவா வழக்கில் வினோத்குமார் என்பவர் 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான்.

என் சகோதரி அமராவதி கடைசி சகோதரி என்றும் அவரது கணவர் சின்னச்சாமி இறந்து விட்டார் என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என ஞாபகம் இல்லை. எனக்கு 1989 க்கு முன்பே 45 ஆண்டுகளுக்கு திருமணம் ஆனது என்றால் தெரியவில்லை. என் மூத்த சகோதரி பாலாமணிக்கு எனக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என் மூத்த சகோதரி பாலாமணிக்கு 48

ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆனது என்றால் இருக்கலாம் . செல்வமணிக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. அவருக்கு 1989 ஆண்டுக்கு முன்பே 40 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தற்போது 60 வயது ஆகிறது , எனக்கு சரியாக தெரியவில்லை. எனக்கு ஆதார் கார்டு , ரேசன் கார்டு இருக்கிறது என்றும் அதை தாக்கல் செய்தால் என் வயது தெரிய வரும் என்றால் சரிதான். நான் தாக்கல் பிரமாண வாக்குமூலத்திற்கு நான்தான் விவரம் சொன்னேன். அந்த பிரமாண வாக்குமூலத்திலும், தாவாவிலும் 40 வயது என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி அமராவதிக்கு தற்போது என்ன வயது என்று தெரியவில்லை. அவருக்கு வயது 33 என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வயது தவறு என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் மகன் வினோத்குமாரின் வயது 27 வயது என போடப்பட்டுள்ளது அது தவறு என்றால் எனக்கு தெரியவில்லை. எனக்கு படிப்பறிவு இல்லை. எனது அப்பா எல்லப்ப நாயக்கர் எந்த வருடம் இறந்தார் என தெரியவில்லை. அவர் இறப்பிற்கு நான் போய் வந்தேன். தாவா சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியும் அதன் சர்வே எண்ணும், பரப்பளவும் தெரியாது. தாவா சொத்துக்களை 1,2 பிரதிவாதியின் மகன்கள்தான் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் அப்பா எல்லப்பநாயக்கரும் அவரது அப்பா கச்சப்ப நாயக்கரும் 07.06.1999 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டது எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா எ செட்யூல் சொத்து கச்சப்பநாயக்கருக்கும் பி அட்டவனை சொத்து எல்லப்ப நாயக்கருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. எனது தாத்தா கச்சப்ப நாயக்கர் இறந்ததற்கு நான் போய் வந்தேன். அவர் எப்போது இறந்தார் என்பது எனக்கு தெரியாது. எனது தாத்தா கச்சப்ப நாயக்கர் தனக்கு ஒதுக்கப்பட்ட எ செட்யூல் சொத்துக்களை பிரதிவாதிக்கு கடந்த 07.06.1999 அன்று ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. அதன்படி 1ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

மேற்படி சொத்துக்களுக்கு பட்டா, சிட்டா அடங்கல் பிரதிவாதி அமராவதி பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா எல்லப்பநாயக்கர் உயிருடன் இருந்த போது பிரதிவாதி தான் சாப்பாடு செய்து பார்த்துக் கொண்டார் என்றால் தவறு. என் அப்பாவை நான் அவர் உயிருடன் இருந்த காலத்தில் சாப்பாடு கொடுத்து பராமரிக்கவில்லை என்றும் , நான் என் அப்பாவின் இறப்பிற்கு போகவில்லை என்றால் தவறு. தாவா சொத்துக்களைப் பொறுத்து என்னென்ன ஆவணங்கள் எழுதிக் கொள்ளப்பட்டது என்பது எனக்கு தெரியாது.

கடந்த 09.11.2000 ம் வருடத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர் சின்னச்சாமிக்கு என் அப்பா சரியான பிரதிபலன் வாங்கி கொண்டு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரையப்பத்திரமான வாசா.ஆ.5ல் என் கணவர் அங்கமுத்து சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரையப்பத்திரம் எழுதிய விவரம் எனக்கு தெரியும் என்றும் , என் கணவர் சாட்சி கையொப்பம் செய்தவிவரம் எனக்கு தெரியும் என்றும் ஆனாலும் இவ்வழக்கிற்காக பொய்யாக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் எழுதிக் கொடுத்து விட்டார் என்ற விவரத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் சொத்து வேண்டும் என கேட்கும்போதுதான் தெரிந்து கொண்டேன். பத்திர அலுவலகத்தில் வில்லங்கம் போட்டு எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதியின் கணவர் சின்னச்சாமி எப்போது இறந்தார் என்பது எனக்கு தெரியாது. அவரது இறப்பிற்கு நான் போய் வந்தேன். எனக்கும் பிரதிவாதிக்கும் எப்போதிருந்து பேச்சு வார்த்தை இல்லை என்பது வருடம் ஞாபகம் இல்லை. எனக்கு 1989ம் ஆண்டுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்ட காரணத்தினாலும் என் அப்பா கிரையம் எழுதி வைத்த காரணத்தினாலும் எனக்கு எந்த விதமான சொத்து பாத்தியம் இல்லை என்றால் தவறு. கடந்த 12.03.2021 அன்று என் சகோதரியின் கணவர் சின்னச்சாமி என் அப்பாவிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்துக்களை அவரது அவரது மனைவியானபிரதிவாதிக்கு எழுதி வைத்து விட்டார் என்றும் அந்த சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் தவறு. என் அப்பா கிரையம் எழுதிக் கொடுத்த காலத்திலிருந்தும், ஆவணம் ஏற்படுத்திக் கொண்ட காலத்திலிருந்தும் தாவா சொத்துக்களில் எனக்கு எந்த வித பாத்தியமும் இல்லை என்பதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு. தாவா சொத்திற்கு நான் வரி ஏதும் செலுத்தவில்லை. தாவா சொத்தில் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் தவறு.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.09 16:04:54 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.